TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051886

1. District மாவட்டம் : Tiruvannamalai    PS காவல்நிலையம் : V&AC    Year ஆண்டு : 2022    FIR No. மு.த.அ. எண் : 09/2022    Date நாள் : 20.07.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.    Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் : 19.07.2022    Date to நாள் வரை : 20.07.2022
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.07.2022    Time நேரம் : 1215 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III    Time நேரம் : 1315 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 10 Kms North East
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி Revenue Inspector Office, Thurinjapuram @ Mallavadi Junction
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt.P.Sulokchana    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் W/o.Puthuran
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-57    (d) Nationality : நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Coolee    (g) Address : முகவரி 156, Pillayar Kovil Street, Oosambadi Village, Tiruvannamalai Taluk, Tiruvannamalai District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tmt. Shayaji Begam, Revenue Inspector, Thurinjapuram Firka, Tiruvannamalai Taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 20.07.2022 ஆம் தேதி பகல் 1215 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் பு.சுலோக்சனா, வயது.57/2022, க/பெ.புதுாரான், 156, பிள்ளையார் கோவில் தெரு, ஊசாம்பாடி கிராமம், திருவண்ணாமலை தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர் பு.சுலோக்சனா, வயது.57, க/பெ.புதுாரான், 156, பிள்ளையார் கோவில், தெரு, ஊசாம்பாடி கிராமம், திருவண்ணாமலை தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருவண்ணாமலை. அய்யா, நான் ஊசாம்பாடி கிராமத்தில் பிள்ளையார் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். எனது கணவர் புதுாரான் எட்டு வருடத்திற்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். எனக்கு இரண்டு மகன்கள்

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

புசுலோசனா 20.7.22

[signature] 20.7.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.7.2022 at 14.00 hrs

Name: பெயர் G. MYTHILY
Rank: நிலை Inspector of police No. எண்
VAC tvm.

உள்ளனர். பெரியவன் சுரேஷ் திருமணமாகி தண்டராம்பட்டு கிராமத்தில் அவனது மாமியார் வீட்டில் குடியிருந்து வருகிறான். சின்ன பையன் சுதாகர் திருமணமாகி ஊசாம்பாடி கிராமத்தில் தனியாக குடியிருக்கிறான். நான் 100 நாள் வேலை செய்து ஜீவனம் செய்து வருகிறேன். எனது கணவர் இறந்துவிட்ட காரணத்தால் விதவை சான்று வாங்கி, எனக்கு தெரிந்த ஒருவர் மூலமாக விதவை உதவி தொகை (DWP எண் 20843 சமூக பாதுகாப்பு திட்டங்கள்) - DWP திட்டத்தின் கீழ் 2019 முதல் மாதம் ரூபாய் 1000/- பெற்று வந்தேன். கடந்த ஏப்ரல் 2022 முதல் எனக்கு உதவி தொகை வரவில்லை. மேலும் எனது உறவினர்கள் குப்பு, கனகா ஆகியோருக்கும் உதவி தொகை வரவில்லை என்ற காரணத்தினால் நாங்கள் மூவரும் சேர்ந்து கடந்த 30.05.2022 ம் தேதி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு கொடுத்தோம். அதில் எங்களுடன் வந்த குப்பு என்பவருக்கு மட்டும் உதவி தொகை வந்து விட்டது. உனக்கு மட்டும் எப்படி உதவி தொகை வந்தது என்று நான் அவரிடம் கேட்ட போது அவர் பணம் கொடுக்காமல் உதவி தொகை வாங்க முடியாது என்று சொன்னார். பின்னர் 19.07.2022 மதியம் சுமார் 3 மணியளவில் நானும் கனகாவும் மல்லவாடி கூட்ரோடில் உள்ள துரிஞ்சாபுரம் RI ஆபீசுக்கு சென்று எனது உதவி தொகை மனு பற்றி RI ஷாயாஜி பேகம் அவர்களிடம் நான் கேட்ட போது அவர் லஞ்சமாக பதினைந்தாயிரம் ரூபாய் கொடுத்தால்தான் எனக்கு உதவி தொகை வர ஏற்பாடு செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு இன்று 20.07.2022 காலை 10.30 மணிக்கு நான் RI ஆபீஸ் சென்று மீண்டும் .எனது உதவி தொகை மனு பற்றி கேட்ட போது அவர் மீண்டும் என்னிடம் லஞ்சமாக பதினைந்தாயிரம் ரூபாய் கொடுத்தால் மட்டுமே உதவி தொகைக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். நானே மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன் என்று நான் சொன்னதற்கு, முதலில் எனக்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடு பின்னர் உதவி தொகை வந்தவுடன் மீதி பத்தாயிரம் ரூபாய் கொடு இல்லையென்றால் உனக்கு உதவி தொகை வராதபடி செய்து விடுவேன் என கறாராக சொல்லி அனுப்பி விட்டார். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால் எனக்கு தெரிந்தவர் மூலமாக இந்த புகார் மனுவை தயார் செய்து கொண்டு இன்று 20.07.2022-ம் தேதி திருவண்ணாமலை லஞ்ச

ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு நேரில் வந்து புகார் கொடுக்கிறேன் என்னிடம் லஞ்சம் கேட்ட RI ஷாயாஜிபேகம் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு (SdXXXXXX) P.சுலோச்சனா

Sir,

Received the complaint on 20.07.2022 at 1215 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 20.07.2022 at 1315 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.09/2022, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 20.07.2022. G.Mythily, Inspector of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

20.7.2022

(G.MYTHILY)

Inspector of Police

V&AC, TVM.